[1993 ஏப்ரல் 8

எஞ்சிய கூட்ட நாட்களுக்குப் பேரவைப் பணிகளினின்று சில உறுப்பினர்கள் தள்ளிவைக்கப்பட்டதை ரத்து செய்ய வேண்டுமென்ற கோரிக்கை மற்றும் பேரவைத் தலைவரின் தீர்ப்பு போன்ற சம்பவத்தில் ஈடுபடுவார்களேயானால் கூட அதை நாங்கள் தாங்கிக் கொள்கிறோம் என்று தெரிவித்திருக்கிறார்கள். இருந்தாலும் அப்படிப்பட்ட நடவடிக்கைகளில் அவர்கள் தொடர்ந்து ஈடுபடுவது என்பது அவையின் கண்ணியத்தைக் குறைப்பதாக அமையும் என்கிற காரணத்தால் அப்படிப்பட்ட நடவடிக்கைகளில் அந்த மாண்புமிகு உறுப்பினர்கள் இனிமேல் ஈடுபடக் கூடாது என்கிற அறிவுரையோடு அவர்களுக்கு வழங்கப்பட்ட தண்டனையை இத்தோடு நிறுத்திக் கொள்ளலாம் என்று முடிவெடுத்து இன்று முதல் அவர்கள் பேரவைக்கு வரலாம் என்ற என்னுடைய தீர்ப்புரையை வழங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி.)

3. உறுப்பினர் டாக்டர் தே. குமாரதாஸ் "எக்கட்சியும் சாராத உறுப்பினர்"—பேரவைத் தலைவரின் தீர்ப்பு :

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, மாண்புமிகு. முதலமைச்சர் அவர்களே கூட இன்று தெரிவித்தார்கள். திரு குமாரதாஸ் எந்தக் கட்சி என்றே கூட தெரியாத நிலைமை இருக்கிறது என்று அதுபற்றியும் என்னுடைய தீர்ப்புரையை வழங்கவேண்டியிருக்கிறது.

பேரவை உறுப்பினர் டாக்டர் தே. குமாரதாஸ் அவர்கள் கடந்த பொதுத் தேர்தலில் ஜனதாதளம் கட்சியில் போட்டியிட்டு வெற்றி பெற்றவர். ஜனதாதளம் அகில இந்தியத் தலைவர் திரு. எஸ். ஆர். பொம்மை அவர்களால் டாக்டர் தே. குமாரதாஸ் கட்சிக்கு எதிரான நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தார் என்ற காரணத்திற்காக அவர் ஜனதாதளத்திருந்து நீக்கப்பட்டதாக 19-10-1992 தேதியிட்ட கடிதம் மூலம் பேரவைத்தலைவருக்கு தெரிவிக்கப்பட்டது.

முற்பகல் 11-25

ஆனால் அதே 19—10—1992 தேதியிட்ட ஓர் கடிதம் மூலம் பேரவை உறுப்பினர் டாக்டர் தே. குமாரதாஸ் அவர்கள் தான் சார்ந்திருந்த ஜனதாதளம் கட்சி தமிழ் நாட்டில் பிளவுபட்டுள்ளதாகவும், அதிலிருந்து பிரிந்துள்ள கட்சியாகிய ஜனதாதளம் காமராஜ் என்ற கட்சியில் தான் இணைந்துள்ளதாகவும் எனவே சட்டமன்றப் பேரவையில் தன்னை "ஜனதாதளம் காமராஜ் கட்சி உறுப்பினர்" என்று ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றும் வேண்டுகோள் விடுத்திருந்தார். இந்நிலையில் டாக்டர் தே. குமாரதாஸ் அவர்கள் அவை உறுப்பினர் என்பதால் அவரது கடிதத்திற்கு முன்னுரிமை வழங்கி——ஏன் என்றால் இரண்டு கடிதங்களும் ஒரே தேதியிட்ட கடிதங்கள் என்ற காரணத்தால்——அவருடைய கடிதத்திற்கு முன்னுரிமை வழங்கி அதே நேரத்தில் தன்னுடைய கட்சி ஜனதாதளம் காமராஜ் என்பதற்கான தேர்தல் ஆணையத்தின் பதிவு

பெற்ற சான்று ஏதும் கொடுக்காததையும் சுட்டிக்காட்டி ஜனதாதளம் உறுப்பினராக அவர் ஒருவர் மட்டுமே உள்ளதையும் கருத்தில்கொண்டு அவர் ஜனதா தளம் குமாரதாஸ் பிரிவு என்ற கட்சியைச் சார்ந்த உறுப்பினராக கருதப்படுவார் என இடைக்கால உத்தரவு ' Interim order '' ஒன்றைப் பிறப்பித்து அது அவை உறுப்பினர்களுக்கும் தெரிவிக்கப்பட்டது.

மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம் 1951 பிரிவு 29(ஏ) படி புதிதாகத் தொடங்கப்படும் கட்சிகள் தேர்தல் ஆணையத்தில் பதிவு செய்யப்பட வேண்டும் என்று உள்ளதால் 31—3—1993 வரை கால அவகாசம் கொடுத்து ''ஜனதா தளம் காமராஜ்'' என்ற கட்சி புதிதாக அமைக்கப்பட்டுள்ளதைத் தேர்தல் ஆணையத்தில் பதிவு செய்து அதற்கான சான்றிதழ் இந்தச் செயலகத்திற்கு—பேரவைச் செயலகத்திற்கு அனுப்புமாறு உறுப்பினர் கேட்டுக் கொள்ளப்பட்டு இருந்தார். உறுப்பினர் டாக்டர் தே. குமாரதாஸ் அவர்கள் 30—3—1993 தேதியிட்ட கடிதத்தில் தேர்தல் ஆணையத்திற்கு ''ஜனதா தளம் காமராஜ்'' கட்சி என்று பதிவு செய்வதற்கான கோரிக்கையுடன் பல்வேறு ஆவணங்களைத் தயாரித்து அனுப்ப வேண்டியிருப்பதாகவும் இது நாள் வரையில் இது தொடர்பாக நடவடிக்கை எதுவும் எடுக்க இயலவில்லை என்பதையும் தெரிவித்து மேலும் இதற்காக ஜூன் இறுதி வரையிலும் கால அவகாசம் வேண்டும் என்று கேட்டு இருந்தார். இதிலிருந்து இது நாள் வரை புதிய கட்சியைத் தேர்தல் ஆணையத்தில் பதிவு செய்வதற்கான எந்தவித நடவடிக்கையும் எடுக்க வில்லை என்பது புலனாகிறது. ஆகவே, அவர் தனது கடிதத்தில் கோரியுள்ளபடி ஜூன் மாதம் இறுதி வரை கால அவகாசம் தருமாறு கேட்டு இருப்பது பொருத்தம் அற்றதாக இருப்பதால் அவர் கோரிய வண்ணம் ஜூன் மாதம் வரை கால அவகாசம் அளிக்க இயலாது என்பது அவருக்குக் கடிதம் வாயிலாகத் தெரிவிக்கப்பட்டது. எனவே, உறுப்பினர் இது நாள் வரையில் தான் ''ஜனதா தளம் காமராஜ்'' கட்சி என்று தேர்தல் ஆணையத்தில் பதிவு செய்துள்ளதற்கான சான்றிதழ் எதுவும் அனுப்ப வில்லை என்ற அடிப்படையிலும், அதைப் பெறுவதற்கான எந்தவிதமான முயற்சிகளும் மேற்கொண்டதற்கான முகாந்திரம் எதுவும் தெரியவில்லை என்பதன் அடிப்படை யிலும் மற்றும் பேரவைச் செயலகத்தில் தற்போதுள்ள ஆவணங்களின் அடிப்படையிலும் முடிவு எடுக்க வேண்டி யுள்ளது. இந்நிலையில் அகில இந்திய ஜனதா தளம் கட்சித் தலைவர் திரு. எஸ். ஆர். பொம்மை அவர்கள் டாக்டர் தே. குமாரதாஸ் அவர்கள் மேற்படி கட்சியி லிருந்து நீக்கப்பட்டுள்ளார்—' ' expelled '' என்று பேரவைத்

தலைவருக்குக் கடிதம் மூலம் தெரிவித்துள்ளதை ஏற்று டாக்டர் தே. குமாரதாஸ் அவர்கள் பேரவையில் ''எந்தக் கட்சியையும் சாராத உறுப்பினர் "unattached member" என்று அறிவிக்கிறேன்.

என்னுடைய அறிவிப்பில் மேலும் சட்டப்பேரவை விதி 6-ன் கீழ் இவரது இருக்கை சம்பந்தமாக தனியாக ஆணை பிறப்பிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.''

4. கவன ஈர்ப்பு.

வடஆற்காடு—அம்பேத்கார் மாவட்டம், பெண்ணாத்தூர் பேரூராட்சியில் ஏற்பட்டுள்ள குடிநீர்த் தட்டுப்பாடு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. திரு. தா. வேடியப்பன் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. தா. வேடியப்பன்

திரு. தா. வேடியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''வடஆற்காடு — அம்பேத்கார் மாவட்டம், பெண்ணாத்தூர் பேரூராட்சியில் ஏற்பட்டுள்ள குடிநீர்த் தட்டுப்பாடு குறித்து'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: விவர அறிக்கை ஒன்று பேரவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை

பெண்ணாத்தூர் பேரூராட்சியில் மொத்த மக்கள் தொகை 7,368 ஆகும், தற்போது இப்பேரூராட்சி மக்களுக்கு கீழ்க்கண்ட குடிநீர் ஆதாரங்கள் மூலம் குடிநீர் சீரான முறையில் தினமும் விநியோகிக்கப்பட்டு வருகிறது:—

(அ) திறந்தவெளி கிணறுகள் .. 27

(ஆ) கைப்பம்பு 26

(இ) தரைமட்ட விசைப்பம்பு மூலம் 8

(ஈ) பொதுக் குழாய்கள் .. 71